# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.0205/2015

ஆணை எண்.0005/2015

நாள்:18/09/2015

திரு.சி. ரெத்தினம்,
ஊராட்சிமன்றத் துணைத் தலைவர்,
பொய்யுண்டார் குடிகாடு,
திருவோணம் ஒன்றியம்.

- முறையீட்டு மனுதாரர்

திரு. ஆனந்தன்,
ஊராட்சிமன்றத் தலைவர்,
பொய்யுண்டார் குடிகாடு,
திருவோணம் ஒன்றியம்.

- எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பொய்யுண்டார் குடிகாடு ஊராட்சியை சேர்ந்த திரு. சி. ரெத்தினம் அவர்களின் முறையீட்டு மனுவில் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஆனந்தன் குறித்து புகார் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார். மேற்படி மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.09.2015 அன்று பெறப்பட்டு 205 எண்ணிட்ட புகார் மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆணை

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம்—2014 சட்டப்பிரிவு 2க்குட்பட்ட உட்பிரிவுகள் (7) மற்றும் (11)—ல் உள்ளாட்சி அமைப்புகள் (ம) பொதுப்பணியாளர் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் ஊராட்சி மன்ற அமைப்பு மற்றும் ஊராட்சி பிரதிநிதிகள் இடம் பெறவில்லை எனவே, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பொய்யுண்டார் குடிகாடு ஊராட்சித் தலைவர் மீதான புகார் மீது நடவடிக்கை மேற்கொள்வது இம்முறைமன்ற நடுவரின் விசாரணை வரம்பிற்கு உட்படாது. எனவே, மனுதாரர் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, புகார் மனுவினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அமைப்பு முடிவு செய்து அதனடிப்படையில் முறையிட்டு மனு முடித்து வைக்கப்படுகிறது.

ஒம்/— முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

18/9/15
கண்காணிப்பாளர்

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர் மாவட்டம்.
தஞ்சாவூர் (இணைப்புடன்)

நகல்

திரு.சி.ரெத்தினம்,
ஊராட்சிமன்ற துணைத் தலைவர்,
பொய்யுண்டார் குடிகாடு,
திருவோணம் ஒன்றியம்.